*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2021** **27 ஜனவரி 2023**

## பத்திரிகை செய்தி

பொதுத் தேர்வுகள் மற்றும் போட்டித் தேர்வுகளில் பங்குபெறும் மாணவ-மாணவிகளின் தேர்வு பயத்தை போக்கி அவற்றை எதிர்கொள்வதற்கான தன்னம்பிக்கையை ஊட்டும் வகையில் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கு பெறும் "பரிக்ஷா பே சர்ச்சா 2023" (Pariksha Pe Charcha) நிகழ்ச்சி இன்று (27-01-2023)நடைபெற்றது.

நாடு முழுவதும் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளி மாணவ-மாணவிகள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுடன் காணொளி வாயிலாக பாரத பிரதமர் கலந்துரையாடினார். மாண்புமிகு துணைநிலை ஆளுநர் டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் தெலுங்கானா ராஜ்பவன் அரசு பள்ளியைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் "பரிக்ஷா பே சர்ச்சா" நிகழ்ச்சியில் பங்கேற்றார்.